FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
(Under Section 173 BNSS)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8348095

1. District மாவட்டம் திண்டுக்கல் | PS காவல்நிலையம் [illegible] | Year ஆண்டு 2026 | FIR No.: மு.த.அ. எண் 418/2026/KP | Date: நாள் 13-06-2026

2. (i) Act சட்டம்: The Prevention of Corruption Act 1988 | Sections பிரிவுகள்: 7, 7A, 12

(ii) Act சட்டம்: the amendment in 2018 | Sections பிரிவுகள்:

(iii) Act சட்டம்: | Sections பிரிவுகள்:

(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் 12-06-2026 | Date from : நாள் முதல் | Date to : நாள் வரை

Time Period : நேர அளவு 18.00 hrs to 23.00 hrs. | Time from : நேரம் முதல் | Time to : நேரம் வரை

(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 13-06-2026 | Time : நேரம் 16.00 hrs.

(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் Vol-I | Time : நேரம் 16.00 hrs.

4. Type of Information : Written/ Oral / Electronic form : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக / மின்னணு வடிவம் கணினி தட்டச்சு செய்யப்பட்டது.

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் தெற்கு 50 கி.மீ தொலைவில்

Beat Number : முறைக் காவல் எண் | (b) Address : முகவரி தனி பாதுகாப்பு அலுவலகம், நாகலாபுரம்.

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் | District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் க. சத்தியமூர்த்தி | (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் கணேசன்.

(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு | (d) Nationality : நாட்டினம் இந்தியர். | (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

Date of Issue : வழங்கப்பட்ட நாள் | Place of Issue : வழங்கப்பட்ட இடம்

(f) Occupation : தொழில் | (g) Address : முகவரி மண்டல துணை வட்டாட்சியர், பல்வேறு பணி நிமித்தம் பிரிவு, திண்டுக்கல் துணை ஆட்சியர் அலுவலகம் (தொகுப்பு)

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

எதிரிகள்: 1) கு.க. நெப்போலியன் 42 S/o அ. கருப்பசாமி, தனி பாதுகாப்பு (தொகுப்பு) நாகலாபுரம் தனி பாதுகாப்பு

2) ஆ. ஜெயக்குமார் 47 S/o பட்டுமாணிக்கம், நாகலாபுரம், திருநெல்வேலி.

3) மு. த. கணேஷ் 54 S/o [illegible], திருப்பரங்குன்றம், மதுரை.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

தாமதமில்லை.


9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

கைப்பற்றப்பட்ட — பணம் ரூ. 83,260/-

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)



13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

13/06/2026

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

13/06/2026

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும் 13.06.2026 at 17.00 hrs.

Name: பெயர் .....
Rank: நிலை .....

FIR வரிசை எண் 12 (FIR Contents)

பணிந்து சமர்ப்பிக்கபடுகிறது.

இன்று 13.06.2026-ம் தேதி 16.00 மணிக்கு செங்கல்பட்டு ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு ஆய்வாளர் S.திருவேங்கடம் ஆகிய நான் நிலைய ஆஜரில் இருந்தபோது திரு.க.சசிகுமார் த/பெ.கணேசன், மண்டல துணை வட்டாட்சியர், பல்லாவரம் வட்டம், செங்கல்பட்டு மாவட்டம், செங்கல்பட்டு துணை ஆய்வுக் குழு அலுவலர் (பொறுப்பு) என்பவர் செங்கல்பட்டு ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவில் ஆஜராகி கொடுத்த புகார் மனுவின் விபரம் பின் வருமாறு.

நாள் 13.06.2026 அனுப்புநர், க.சசிகுமார் த/பெ.கணேசன், மண்டல துணை வட்டாட்சியர், பல்லாவரம் வட்டம், செங்கல்பட்டு மாவட்டம், செங்கல்பட்டு துணை ஆய்வுக் குழு அலுவலர் (பொறுப்பு). பெறுநர், காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு, செங்கல்பட்டு. அய்யா, பொருள்: திடீர் கூட்டாய்வு - மாவட்ட ஆய்வுக்குழு மற்றும் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு - நாவலூர் சார்-பதிவாளர் அலுவலகம் - 12.06.2026-ந் தேதி திடீர் கூட்டாய்வு மேற்கொள்ளப்பட்டது - தொடர்பாக. பார்வை: திடீர் கூட்டாய்வு சோதனையின் செயல்முறைகள் நாள் 12.06.2026, செங்கல்பட்டு மாவட்டம், நாவலூர் சார்பதிவாளர் அலுவலகத்தில், ஆவண பதிவிற்கு வரும் பொதுமக்களிடமிருந்து, சார்பதிவாளர் அதிகப்படியான பணம் லஞ்சமாக வசூலிப்பதாக கிடைத்த ரகசிய தகவலின் அடிப்படையில், ரகசியமாக கண்காணிக்கப்பட்டதில் அவ்வாறு அவர் லஞ்சமாக பணம் பெறுவது தெரியவந்ததின் அடிப்படையில் செங்கல்பட்டு மாவட்டம், நாவலூர் சார்பதிவாளர் அலுவலகத்தில், 12.06.2026-ம் தேதி சுமார் 18.05 மணி முதல் 23.00 மணி வரை மேற்கொள்ளப்பட்ட இரு துறை திடீர் கூட்டாய்வின்போது பொறுப்பு சார்பதிவாளர் திரு.க.நெப்போலியன் வ/43, த/பெ கந்தசாமி என்பவரிடம் இருந்து அவருடைய வாகன எண்.TN 11 AY 5194 (SKODA AUTO)-ல் இருந்து ரூ.68,100/- கைப்பற்றப்பட்டது. மேலும் சார்பதிவாளர் அலுவலகத்தில் இருந்த தனி நபரான திரு.க.கண்ணன் வ/54 த/பெ சுந்தரம், காஞ்சிபுரம் என்பவரிடம் இருந்து ரூ.15,160/- கைப்பற்றப்பட்டது. ஆக மேற்படி பணம் திடீர் கூட்டாய்வின்போது விசாரணையில் லஞ்சபணமாக பெறப்பட்டது என தெரியவந்தது. இரு துறை திடீர் கூட்டாய்வு ஏற்படுத்தப்பட்டது தொடர்பாக செயல்முறை ஆணை ஏற்படுத்தப்பட்டது. மேலும் திடீர் கூட்டாய்வில் சான்றொப்பமிட்ட ஆவணங்களும் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. திடீர் கூட்டாய்வில் கைப்பற்றப்பட்ட பணம் மற்றும் ஆவணங்களை இத்துடன் இணைத்துள்ளேன். இது தொடர்பாக சம்மந்தப்பட்ட நபர்கள்மீது சட்டப்படியான நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். (ஒப்பம்sdxxx) 13/6/26 (க.சசிகுமார்) மண்டல துணை வட்டாட்சியர், பல்லாவரம் வட்டம், செங்கல்பட்டு மாவட்டம், செங்கல்பட்டு துணை ஆய்வுக் குழு அலுவலர் (பொறுப்பு) இணைப்பு, மேலே சொன்னவாறு. மேலும், 12.06.2026-ம் தேதி திரு.க.சசிகுமார் த/பெ.கணேசன், மண்டல துணை வட்டாட்சியர், பல்லாவரம் வட்டம், செங்கல்பட்டு மாவட்டம், செங்கல்பட்டு துணை ஆய்வுக் குழு அலுவலர் (பொறுப்பு) என்பவரால் ஏற்படுத்தப்பட்ட செயல்முறைகளின் விவரம் பின்வருமாறு.

செங்கல்பட்டு மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) (பொறுப்பு) திருமதி.ப்பி.க்யூரி, அவர்களின் உத்தரவிற்கு இணங்க திரு.க.சசிகுமார் த/பெ கணேசன், மண்டல துணை வட்டாட்சியர், பல்லாவரம் வட்டம், செங்கல்பட்டு மாவட்டம் ஆகிய என்னை செங்கல்பட்டு ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புபிரிவினர் மற்றும் மாவட்ட ஆய்வுக்குழு சார்பாக இருதுறை கூட்டாய்வு செய்ய நியமித்ததின் பெயரில் ஏற்படுத்திய செயல்முறைகள், முன்னிலை-

13/6/26

திரு.க.சசிகுமார் த/பெ கணேசன், மண்டல துணை வட்டாட்சியர், பல்லாவரம் வட்டம், செங்கல்பட்டு மாவட்டம் செங்கல்பட்டு துணை ஆய்வுக் குழு அலுவலர் (பொறுப்பு). பொருள்:- இருதுறை திடீர் கூட்டாய்வு - நாவலூர் - சார்-பதிவாளர் அலுவலகத்தில் 12.06.2026-ம் தேதி திடீர் கூட்டாய்வு மேற்கொள்ளப்பட்டது - தொடர்பான செயல்முறைகள். ஆணை:- செங்கல்பட்டு மாவட்டம், நாவலூர் சார்பதிவாளர் அலுவலகத்தில், ஆவண பதிவிற்கு வரும் பொதுமக்களிடமிருந்து, சார்பதிவாளர் அதிகப்படியான பணம் லஞ்சமாக வசூலிப்பதாக கிடைத்த ரகசிய தகவலின் அடிப்படையில், ரகசியமாக கண்காணிக்கப்பட்டதில் அவ்வாறு அவர் லஞ்சமாக பணம் பெறுவது தெரியவந்ததின் அடிப்படையில் செங்கல்பட்டு மாவட்டம், நாவலூர் சார்பதிவாளர் அலுவலகத்தில், இன்று 12.06.2026-ம் தேதி சுமார் 18.05 மணிக்கு ஆரம்பித்து மேற்கொள்ளப்பட்ட இரு துறை திடீர் கூட்டாய்வின்போது நடைபெற்ற நிகழ்வின் விவரம் பின்வருமாறு. இன்று 12.06.2026-ம் தேதி சுமார் 18.05 மணியளவில் இரு துறை கூட்டாய்விற்கு நாவலூர் சார்பதிவாளர் அலுவலகத்திற்கு சென்றபோது, அந்த அலுவலகமானது கிழக்கு மேற்காக செல்லும் நாவலூர் - தாழம்பூர் சாலையின் தெற்குதிசையில் நாவலூர் சார்பதிவாளர் அலுவலகம் அமைந்துள்ளது. அலுவலகத்தின் எதிரே கிழக்கில் சென்னை கார்கேர்ஸ் நிறுவனமும் அலுவலகத்தின் எதிரே மேற்கில் சாமுண்டீஸ்வரி நகர் செல்லும் சாலையும் அமைந்துள்ளது. நாவலூர் சார்பதிவாளர் அலுவலகத்திற்குள் செங்கல்பட்டு ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புபிரிவு போலிஸ் சகிதம் மெயின் கேட்டினை கடந்து உள்ளே செல்ல முற்பட்டபோது, நாவலூர் பொறுப்பு சார்வதிவாளர் திரு.க.நெப்போலியன் என்பவர் அலுவலகத்தில் இருந்து TN 12 AQ 3128 என்ற YAMAHA இரு சக்கர வாகனத்தில் பின்னர் விசாரணையில் பெயர் விலாசம் கேட்டு தெரிந்த R.ஜெபர்சன் வ/27, த/பெ லட்சுமனபெருமாள் நெ.15/4A, வடக்கு ஆவரந்தலை, நாங்குநேரி, திருநெல்வேலி 627 102 தற்போது நெ.5, முத்தமிழ் குறுக்கு தெரு, கேம்ப்ரோடு சேலையூர், சென்னை 600073, என்பவர் வாகனத்தில் சென்றனர் பின்னர் நான் நாவலூர் சார்பதிவாளர் அலுவலகத்தினை கண்காணிக்க காவலர்களை நியமித்து பின்னர் நான் மற்றும் காவல் ஆய்வாளர் மற்றும் ஊழல் தடுப்பு பிரிவு குழுவினருடன் பின்தொடர்ந்து சென்றபோது Green Wood City யில் அமைந்துள்ள Residency Park -1 எதிரே நிறுத்திவைக்கப்பட்டு இருந்த நான்கு சக்கர வாகன எண். TN 11 AY 5194 (SKODA AUTO) மேற்படி இருவரும் அமர்ந்து பேசிக்கொண்டு இருந்தபோது நான் அவர்களிடம் என்னையும் என்னுடன் வந்த காவல் ஆய்வாளர் திரு.சு.திருவேங்கடம் மற்றும் ஊழல் தடுப்பு மற்றும் காவல் குழுவினரை அறிமுகம் செய்து கொண்டு சுயபரிசோதனை செய்து காண்பிக்கப்பட்டு குழுவினர்களிடம் எவ்வித பணமோ பொருளோ இல்லை என்பதை உறுதி செய்து அவரை பெயர் விலாசம் கேட்டு விசாரிக்க தனது பெயர் க.நெப்போலியன் வ/43, D.O.B.15.04.1981, த/பெ கந்தசாமி உதவியாளர், சார்பதிவகம் அச்சரப்பாக்கம், பகராண்மையில் (OD) சார்பதிவாளர், சார்பதிவகம் நாவலூரில் கடந்த எட்டு மாதங்கலாக பணிபுரிவதாக தெரிவித்தார். மேலும் வீட்டு முகவரி, A-1, 4, ரூபி நட்சத்தரா அப்பார்ட்மெண்ட், கிருஷ்ணா நகர், மேற்கு தாம்பரம், என தெரிவித்தார் தனது கைபேசி எண். 9042314500, 7010094728 என தெரிவித்தார். மேலும் அவர் வெளியே வரும்போது அலுவலகத்தில் வெள்ளை கலர் சட்டை மற்றும் பேண்ட் அணிந்து இருந்த நபர் தாடி மற்றும் குடிமியுடன் இருந்த அந்த நபரை பற்றி விசாரிக்க அவர் Guideline value விசாரிக்க வந்ததாக கூறினார். மேற்படி வண்டியை அவரது ஒப்புதலின்பேரில் சோதனை செய்தபோது அவ்வண்டியின் Glove Box -ல் ஒரு வெள்ளை பேப்பரில் ரப்பர்பேண்ட் சுற்றியவாறு கத்தையாக இருந்த பணத்தை எடுத்து எண்ணியபோது கீழே கண்டவாறு உள்ள வகைப்பாட்டின்படி ரூ.68,100/- இருந்தது.

13/6/26

500X135=67500,
200X 2= 400
100X 2= 200
Total 68,100

மேற்படி பணம் குறித்து அவரிடம் வாய்மொழியாக விசாரித்தபோது அவர் இப்பணம் பற்றி எனக்கு எதுவும் தெரியாது என்று சொன்னார். மேற்படி வாகனத்தில் இருந்த திரு.R.ஜெபர்சன் என்பவரை விசாரிக்க தினந்தோரும் பொறுப்பு சார்பதிவாளர் அவர்களை மேற்படி வாகனம் நின்ற இடத்திற்கு கூட்டிச்சென்றுவிடுவதும் மேலும் அவர்கொடுக்கும் பணத்தை மேற்படி பொறுப்பு சார்பதிவாளர் வாகனத்தில் வைப்பது அவருடைய வேலை என்று கூறினார் இதற்கு சார்பதிவாளர் தனியாக R.ஜெபர்சன் என்பவருக்கு வதூலுக்கு தகுந்தவாறு பணம் கொடுப்பார் என்று தெரிவித்தார். மேலும் காரில் இருந்த பணத்தை இவர்தான் கொண்டு வந்து வைத்ததாக கூறினார். இப்பணம் ஆவணப்:திவிற்கு வந்தவர்களிடம் பெறப்பட்ட லஞ்சப்பணம் என கருதி விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. பின்னர் சார்பதிவாளர் மற்றும் R.ஜெபர்சன் ஆகியோரை அழைத்துக்கொண்டு சார்பதிவாளர் அலுவலகத்திற்கு சுமார் 18.25 மணிக்கு உள்ளே நுழைந்தபோது கீழே கண்ட அலுவலக பணியாளர் மற்றும் ஒப்பந்த பணியாளர் அலுவலக பணியில் இருந்தார்கள். அவர்கள் குறித்து விசாரணை செய்த விவரம் பின்வருமாறு பட்டியலிடப்படுகிறது.

வ. எண்	ஆஜரில் இருந்த அலுவலக ஆளிநர்கள்	வைத்திருந்த பணம்	தனி நபர் பணக் கையிருப்பு பதிவேட்டின் விவரம்
1.	திரு.க.நெப்போலியன் வ/43, த/பெ கந்தசாமி உதவியாளர், சார்பதிவகம் அச்சரப்பாக்கம். பகராண்மையில் (OD) பொறுப்பு சார்பதிவாளர், சார்பதிவகம் நாவலூர். வீட்டு முகவரி, A-1, 4, ரூபி நட்சத்தரா அப்பார்ட்மெண்ட். கிருஷ்ணா நகர், மேற்கு தாம்பரம்.	68100	800
2.	திரு.க.விமல்ராஜ், வ/36, த/பெ கன்னியப்பன், இளநிலை உதவியாளர், சார்பதிவகம், நாவலூர், முகவரி, நெ.13, விநாயகர் கோவில் தெரு, சின்ன களக்காடி, செய்யூர் தாலுக்கா, செங்கல்பட்டு	100	100
3.	திரு.M.கணேஷ் வ/33, த/பெ மனோகர், Data Entry Operator, பாலதண்டாயுதபாணி தெரு, ஓரிக்கை, காஞ்சிபுரம்.	100	தனி நபர் பணக்கையிருப்பு பதிவேட்டில் அவருடைய பெயர் மற்றும் பணம் குறித்த விவரம் எதுவும் எழுதவில்லை

அலுவலகத்தில் திடீர் கூட்டாய்வின்போது கீழ் குறிப்பிடப்பட்டுள்ள தனிநபர்களும் அவர்கள் வைத்திருந்த பண விவரம் மற்றும் பணம் வைத்திருந்ததற்காக கொடுக்கப்பட்ட விளக்கம் பின்வரும் பட்டியலில் கொடுக்கப்பட்டுள்ளது.

13/6/26

வ. எ ண்.	ஆஜரில் இருந்த தனி நபர்களின் விவரம்	வைத்திருந்த இருப்புத்தொகை	பணத்திற்கான விளக்கம்
1.	S.கண்ணன் வ/54, த/பெ சுந்தரம், நெ.104, துர்கையம்மன் கோயில் தெரு, திருப்புலிவனம் கிராமம், காஞ்சிபுரம் மாவட்டம். 8489955833	500X28=14000 200X 3= 600 100X 5= 500 50X 1= 50 10X 1= 10 Total = 15160	மேற்படி நபர் குறித்து பொறுப்பு சார்பதிவாளர் அவர்களிடம் விசாரணை செய்தபோது மேற்படி நபர் Guideline Value பெறுவதற்காக வந்தவர் என்றார் ஆனால் மேற்படி நபரை விசாரணை செய்தபோது இவர் குப்புசாமி த/பெ லேட் நடராஜர் பிள்ளை நெ.2/20, வேம்புலி அம்மன் கோவில் தெரு, வண்டலூர், சென்னை என்பவரிடம் உத்திரமேரூர் ஆ கிராமம் சர்வே எண்கள் 1212/3A,5 அமைக்கப்பட்ட மனைப்பிரிவுகள் சம்மந்தமான இடத்தினை விலைக்கு வாங்கப்போவதாகவும் அதற்கு காலிமனை வரி அதிகமாக உத்திரமேரூர் சிறப்பு நிலை போரூராட்சியால் அதிகமாக நிர்ணயம் செய்யப்பட்ட தொகை ரூ.1,19,067.00/- குறித்து விசாரிக்க வந்ததாக கூறினார். மேலும் இவரை காவல் ஆளினரை வைத்து சோதனை செய்தபோது பட்டியலில் சொல்லப்பட்ட பணம் அவருடைய பேண்ட பாக்கெட்டுகள் மற்றும் சட்டையில் சுருட்டி வைக்கப்பட்ட நிலையில் இருந்த பணம் பத்திரப்பதிவிற்கு வந்தவர்களிடம் பொறுப்பு சார்பதிவாளர் அவர்களுக்காக பெறப்பட்ட லஞ்ச பணமாக இருக்கலாம் என கருதி விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. இது குறித்து அவர் காண்பித்த 11.06.2026-ம் தேதியிட்ட சிறப்புநிலை போரூராட்சி அலுவலகம், உத்திரமேரூர், கடித குறிப்பு நகல் ந.க.எண்.901/2026 அ1 Xerox copy விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது.
2.	S.மோனிஷ் வ/23, த/பெ சிவலிங்கம், நெ.23/7 துலுக்காணத்தான் கோயில் தெரு, கன்னிவாக்கம், அண்ணாநகர், செங்கல்பட்டு.	பணம் ஏதும் இல்லை	மேற்படி நபரை விசாரணை செய்தபோது தற்போது நாவலூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் அலுவலக உதவியாளர் இல்லாததால், அதிகபடியான ஆவணங்கள் பத்திரப்பதிவிற்கு வரும்போது சீல்போடுவது, குறிப்பு எழுதுதல் போன்ற பணிக்காக சார்பதிவாளர் தினக்கூலி அடிப்படையில் தன்னை வேலைக்கு கூப்பிடுவார் என்றும் ஒரு நாளைக்கு கூலியாக ரூ.500/- கொடுப்பார் என்றும் இவர் மார்ச் மாதத்தில் இருந்து இந்த பணி செய்து வருவதாகவும் கூறினார்.
3.	திரு.V.ராஜாராம் பாண்டியன், வ/39, த/பெ போஸ், நெ.PMD Nagar, சக்திநகர், பீர்க்கன்கரனை, தாம்பரம். 7418937278	பணம் ஏதும் இல்லை	அவரை விசாரணை செய்ததில் தான் நாவலூர் சார்பதிவகத்தில் க.நெப்போலியன் அவர்கள் அழைத்ததின் பேரில் நாவலூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் Data Entry வேலை பார்த்து வருவதாகவும் தனக்கு தினமும் கூலியாக வேலைக்கு ஏற்றவாறு ரூ.500 முதல் ரூ.700 வரை தினக்கூலியாக வழங்குவார் எனக்கூறினார்.
4.	திரு.S.சங்கர் வ/37, த/பெ சுப்பிரமணியன், தெற்கு தெரு, சேரன்குளம் கிராமம், மன்னார்குடி தாலுக்கா, திருவாரூர் மாவட்டம். 9094354335	பணம் ஏதும் இல்லை	இவரை விசாரணை செய்தபோது அவர் காசாகிராண்ட் நிறுவனத்தில் பணிபுரிந்து வருவதாகவும் தான் நிறுவனம் சார்பாக பதிவு செய்த ஆவணத்தை பெற வந்ததாக தெரிவித்தார்.

5.	திரு.அசோக்குமார், வ/31 த/பெ P.ராமன், இரண்டாவது தளம், சூர்யா அப்பார்ட்மெண்ட், மாடம்பாக்கம். 9962131025 9150370835	பணம் ஏதும் இல்லை	இவரை விசாரணை செய்தபோது அவர் காசாகிராண்ட் நிறுவனத்தில் Salesman ஆக பணிபுரிந்து வருவதாகவும் தான் நிறுவனம் சார்பாக பதிவு செய்த ஆவணத்தை பெற வந்ததாக தெரிவித்தார்.

தொடர்ந்து நான் குழுவினர் உதவியுடன் சுமார் 25 அடி X 40 அடி நீளம் அகலம் கொண்ட நாவலூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் இயங்கிவரும் சார்பதிவாளர் இருக்கை கணினி அறை, பதிவுவைப்பறை. உதவியாளர் இருக்கை மற்றும் இதர இடங்களை சோதனை செய்து பார்த்தபோது கைப்பற்றக்கூடிய பணமோ பொருளோ எதுவும் கண்டறியப்படவில்லை. மேற்படி சோதனையில் கண்டறியப்பட்ட பணம் ரூ.83,260/- நாவலூர் சார்பதிவாளர் அலுவலகத்திற்கு இன்று பத்திரப்பதிவிற்காக வந்தவர்களிடம் லஞ்சமாக பெறப்பட்டது எனக்கருதி கைப்பற்றப்பட்டது. மேற்படி நாவலூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் பொறுப்பு சார்பதிவாளர் திரு.க.நெப்போலியன் அவர்கள் முன்னிலையில் மேற்கொள்ளப்பட்ட இந்த திடீர் ஆய்வு சோதனையில் பொதுமக்கள் மற்றும் ஊழியர்கள் ஆகியோர்களுக்கு உடலாலோ மனதாலோ எந்தவித சங்கடங்களும் ஏற்படுத்தவில்லை மேலும் சார்பதிவக மின்சாதனங்கள், இயந்திரங்கள் ஆகியவற்றிற்கு எந்த சேதாரமும் ஏற்படுத்தவில்லை மேலும் சோதனையின்போது எந்தெந்த ஆவணங்கள் எங்கு இருந்து எடுக்கப்பட்டதோ சேதாரம் ஏதும் இன்றி அவ்விடத்திலேயே வைக்கப்பட்டது. மேலும், அலுவலகத்தில் இருந்து கீழே கண்ட சான்றொப்பமிட்ட ஆவணங்கள் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. 1) தொகுதி எண்.1, தனிநபர் கையிருப்பு பதிவேடு. 31.07.2025 முதல் என்று Lable ஒட்டப்பட்ட சம்மந்தப்பட்ட பக்கங்கள் 2) தொகுதி எண்.02. வருகைப்பதிவேடு. 01.01.2026 முதல் என்று Lable ஒட்டப்பட்ட நாவலூர் சார்பதிவாளர் அலுவலகம் அலுவலர்களின் வருகைப்பதிவேட்டின் சம்மந்தப்பட்ட பக்கங்கள் 3) தொகுதி-1 31.07.2025 முதல் Lable ஒட்டப்பட்ட நாவலூர் சார்பதிவாளர் அலுவலகம் இயக்கப்பதிவேடு. (Movement Register) சம்மந்தப்பட்ட பக்கங்கள் 4) சார்பதிவாளரை கேட்டுக்கொண்டதன்பேரில் அவர் கணினியில் இருந்து Print out எடுத்து ஆஜர்படுத்திய Year 2026 Month June Account "A" Navalur Date from 12.06.2026 to 12.06.2026 Account ஐ பார்வையிட்டதில் இன்று பதிவிற்காக முன் பதிவு செய்யப்பட்ட Token களின் எண்ணிக்கை 88 அதில் பதிவு செய்யப்பட்ட ஆவணங்களின் எண்ணிக்கை 64 என தெரியவந்தது. மேற்படி இக்கூட்டாய்வின்போது பணம் கைப்பற்றப்பட்ட நபர்களை விசாரித்தும், அலுவலக ஆஜரில் இருந்த பொறுப்பு சார்பதிவாளர் மற்றும் அலுவலக ஊழியர்கள் அவரவர்களது விளக்கங்களை எழுத்து மூலமாக தனித்தனியாக எழுதி கொடுத்ததை பெற்றேன். தனி நபர்களை விசாரணை முடித்து, மீண்டும் விசாரணையின் போது ஆஜராகுமாறு அறிவுறுத்தி அனுப்பிவைக்கப்பட்டது. இந்த இரு துறை திடீர் கூட்டாய்வு இன்று 12.06.2026 தேதி மாலை 18.05 மணிக்கு ஆரம்பிக்கப்பட்டு 23.00 மணிக்கு முடிக்கப்பட்டது.

1. (ஒப்பம் SD xxx)
க.நெப்போலியன் வ/43,
த/பெ கந்தசாமி
உதவியாளர், சார்பதிவகம்
அச்சரப்பாக்கம்,
பகராண்மையில் (OD)
பொறுப்பு சார்பதிவாளர்,
சார்பதிவகம் நாவலூர்.
செங்கல்பட்டு மாவட்டம்.

2.(ஒப்பம் SD xxx)
திரு.க.விமல்ராஜ் வ/36,
த/பெ கன்னியப்பன்,
இளநிலை உதவியாளர்,
சார்பதிவகம், நாவலூர்,
முகவரி.நெ.13, விநாயகர் கோவில்
தெரு, சின்ன களக்காடி,
செய்யூர் தாலுக்கா,
செங்கல்பட்டு மாவட்டம்

3. (ஒப்பம் SD xxx)
திரு.M.கணேஷ் வ/33,
த/பெ மனோகர்,
Data Entry Operator,
பாலதண்டாயுதபாணி தெரு,
ஓரிக்கை,
காஞ்சிபுரம் மவாட்டம்

13/6/26

4) (ஒப்பம் SD xxx) R.ஜெபர்சன்
வ/27, த/பெ லட்சுமனபெருமாள்
நெ.15/4A, வடக்கு ஆவரந்தலை,
நாங்குநேரி திருநெல்வேலி 627 102
தற்போது நெ.5, முத்தமிழ் குறுக்கு
தெரு, கேம்ப்ரோடு சேலையூர்,
சென்னை 600073.

5) (ஒப்பம் SD xxx)
S.கண்ணன் வ/54,
த/பெ சுந்தரம், நெ.104,
துர்கையம்மன் கோயில் தெரு,
திருப்புலிவனம் கிராமம்,
காஞ்சிபுரம் மாவட்டம்.

6) (ஒப்பம் SD xxx)
S.மோனிஷ் வ/23,
த/பெ சிவலிங்கம்,
நெ.23/7துலுக்காணத்தான் கோயில்
தெரு.கன்னிவாக்கம், அண்ணாநகர்,
செங்கல்பட்டு.

7) (ஒப்பம் SD xxx)
திரு.V.ராஜாராம் பாண்டியன்,
வ/39, த/பெ போஸ்,
நெ.PMD Nagar,
சக்திநகர், பீர்க்கன்கரனை,
தாம்பரம்.

8) (ஒப்பம் SD xxx)
செல்வி.S.வளர்மதி
சார்பு ஆய்வாளர்,
ஊழல் தடுப்பு மற்றும்
கண்காணிப்பு பிரிவு,
செங்கல்பட்டு.

.9) (ஒப்பம் SD xxx)
திரு.D.தினேஷ் வினோ,
த.கா.663,
ஊழல் தடுப்பு மற்றும்
கண்காணிப்பு பிரிவு,
செங்கல்பட்டு.

10) (ஒப்பம் SD xxx)
திருமதி.K.பரமேஸ்வரி,
பெ.த.கா.660
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு
பிரிவு செங்கல்பட்டு.

11) (ஒப்பம் SD xxx)
திரு.V.பிரசாந்த்
காவலர்.470
ஊழல் தடுப்பு மற்றும்
கண்காணிப்பு பிரிவு
செங்கல்பட்டு.

12) (ஒப்பம் SD xxx)
S.திருவேங்கடம்,
காவல் ஆய்வாளர்
ஊழல் தடுப்பு மற்றும்
கண்காணிப்பு பிரிவு
செங்கல்பட்டு.

13) (ஒப்பம் SD xxx)
திரு.க.சசிகுமார்
த/பெ.கணேசன்,
மண்டல துணை வட்டாட்சியர்,
பல்லாவரம் வட்டம், செங்கல்பட்டு
மாவட்டம் செங்கல்பட்டு பொறுப்பு
துணை ஆய்வுக் குழு அலுவலர்.

ஐயா,

மேலே கண்ட புகார் மனுவினை இன்று 13.06.2026-ம் தேதி 16.00 மணிக்கு பெற்று செங்கல்பட்டு ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு கு.எண்.4/AC/2026/CP பிரிவுகள் 7, 7A, 12 of the Prevention of Corruption Act, 1988 as amended in 2018 ஆக வழக்கு பதிந்து விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. இதன் அசல் முதல் தகவல் அறிக்கை. வாதியின் புகார் மனு மற்றும் செயல்முறை ஆணை மற்றும் அதனுடன் இணைக்கப்பட்ட ஆவணங்கள் மாண்பமை செங்கல்பட்டு மாவட்ட முதன்மை மற்றும் அமர்வு நீதிமன்றத்திற்கு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

(கு.திருவேங்கடம்) 13/6/26
காவல் ஆய்வாளர்,
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப்பிரிவு,
செங்கல்பட்டு.